








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜுலை - 2019

We Are Here..!! To Guide You..!!









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜூலை - 17.07.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்
- முக்கிய தினம்











The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

## தேசிய நிகழ்வுகள்

- **மத்தியப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த மழையின் காரணமாக ரேவாவில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின் திட்டமானது சேதமடைந்தது.** பலத்த மழையால் ஏற்பட்ட மண் சரிவைத் தொடர்ந்து இந்தச் சேதம் ஏற்பட்டுள்ளது.
    - தற்சமயம் மழை நின்றுவிட்ட காரணத்தால், வல்லுநர்கள் அந்த மின் நிலையத்தை பழுதுப்பார்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். **மதிப்பீடுகளின்படி, மழையால் இந்தத் திட்டத்துக்கு ரூ. 20 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது.**

- **நீடித்த வளர்ச்சியில் முதன்மை கவனத்தைச் செலுத்தும் விதமாக ஜூலை 28 அன்று முசோரியில், முதலாவது இமயமலை மாநிலங்களின் மாநாட்டை (Himalayan States' Conclave) உத்தரகாண்ட் நடத்தவுள்ளது.** இமயமலை மாநிலங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும். இதில் உத்தரகாண்ட், ஜம்மு & காஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம், சிக்கிம், அஸ்ஸாம், அருணாசல பிரதேசம், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா மற்றும் நாகலாந்து உள்ளிட்ட அனைத்து இமயமலை மாநிலங்களில் முதலமைச்சர்களும் அவர்களது நிர்வாகிகள் & சிறப்பு வல்லுநர்களுடன் கலந்துகொள்வார்கள்.

- **தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில மொழிகளிலும் தபால் துறைத் தேர்வுகளை எழுதலாம்** என்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்வு ரத்து செய்யப்படுகிறது என்றும் மாநிலங்களவையில் **மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் அறிவித்தார்.**

## சர்வதேச நிகழ்வுகள்

- **பாலாகோட் தாக்குதலுக்குப் பிறகு, இந்திய விமானங்கள் தங்கள் நாட்டு வான்எல்லையில் பறப்பதற்கு விதித்திருந்த தடையை சுமார் நான்கரை மாதங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் நீக்கியுள்ளது.**

- இதையடுத்து, பாகிஸ்தான் வான்வெளி வழியாகப் பயணம் மேற்கொள்ளாமல் இருந்த இந்திய விமானங்கள், செவ்வாய்க்கிழமை முதல் அப்பகுதியின் வழியாக மற்ற நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மின்னணு சிகரெட்டுகள் மூளைத்தண்டின் செல்களில் மன அழுத்தத்தை உருவாக்குகின்றன என்பதைக் கண்டறிந்துள்ளனர்.** வளர்ப்புச்சுண்டெலியின் நரம்பியல் தண்டு செல்களைப் பயன்படுத்தி, e-சிகரெட்டுகளால் தூண்டப்பட்ட தண்டு செல் நச்சுத்தன்மையின் அடியொற்றிய "Stress-Induced Mitochondrial Hyper-fusion (SIMH) என்னும் வழிமுறையை அவர்கள் அடையாளங்கண்டுள்ளனர்.

## முக்கிய தினங்கள்

- **ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 17 ஆம் தேதி உலகம் முழுவதும் சர்வதேச நீதி நாள் அனுசரிக்கப்படுகிறது.**
    - நீங்கள் அமைதியையும் வளர்ச்சியையும் விரும்பினால் சமூக நீதிக்காக செயல்படுங்கள்

WeShine Academy™